முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

E.A No. 1/2025

in

E.P.No.14/2018

தேதி : 19–11–2025

(ம.சா.1) – திரு.தங்கவேல்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :

1. மனு சொத்து எங்குள்ளது என்றால் மானூரில் உள்ளது. சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 95. என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் நான் வழக்கு சொத்தின் தோட்டத்தில் இருந்தேன், அப்போது மகேஸ்வரி என்பவர் வீட்டை விலைக்கு வைத்து கொள்ளுமாறு சொன்னார்கள், ரூ.2.5 லட்சம் செலுத்திவிட்டு வைத்து கொள்ளச்சொன்னார். எப்போது சொன்னார் என்றால் தேதி மாதம் ஞாபகமில்லை, 2009. அவர்களாகவே சொன்னார்களா என்றால் ஆமாம். தேதி, மாதம் ஞாபகமில்லை, 2009 அவர்களிடம் ரூ. 2.5 லட்சம் கொடுத்தேன். அதற்கு ஏதாவது ஆவணம் எழுதினேனா என்றால் இல்லை, ரூ.50 ஆயிரம் கொடுக்கும்போது எழுதிக்கொள்ளலாம் என்று சொன்னர்கள், அந்த ரூ. 50 ஆயிரத்தை 2016ல் கொடுத்துவிட்டேன். இடம் கொடுப்பதாக சொன்னவர் உறவினரா என்றால் ஆமாம், அவர் என்னை அண்ணா என்று கூப்பிடுவார்.

2. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன், அதில்வில்லங்கம் இல்லை. அந்த வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வில்லங்கம் எந்த ஆண்டிற்கு பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் 2ம் எதிர்மனுதாரரிடம் பதிவு செய்யாத ஆவணத்தை ஏற்படுத்தினேன் என்று சொல்லியுள்ளேன் என்றும், அது எந்த ஆண்டு என்றால் 2014. கிரைய ஒப்பந்த பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் மரகதம் பெயரில் வாங்கப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும், அது ம.சா.ஆ.1 பத்திரமானது பூம்பாறையை சேர்ந்த பழனிச்சாமி சேர்வை என்பவர் முன்தேதியிட்ட

வாங்கிய பத்திரத்தை நானும், 2ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து உண்மைக்கு மாறாக பூர்த்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் ரூ.2.5 லட்சம் தொகை குறிப்பிட்டு வீட்டை விலைக்கு வாங்குவதாக எழுதப்பட்டியிருந்தது. அந்த ஆவணத்தில் எத்தனை ஆண்டு காலக்கெடு போடப்பட்டியிருந்தது என்றால் 2014ல் எழுதிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

3. அந்த ஆவணத்தில் அப்படி சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கை பற்றி தெரிந்து கொண்டு முன்தேதியிட்ட மேற்படி பழனிச்சாமி சேர்வை பெயரில் வாங்கிய பத்திரத்தை வைத்து பின்னர் நிரப்பியுள்ளோம் என்றால் சரியல்ல. 2009ல் ரூ.2லட்சம் கொடுத்துள்ள நிலையில் ரூ.50 ஆயிரத்திற்காக 2014ல் பதிவு செய்து கொள்ளலாம் என்று ஏன் சொல்லப்பட்டது என்றால் என்னிடம் ரூ. 50 ஆயிரம் பணம் இல்லை, பின்னர் பணத்தை கொடுத்தபின்னரும் 2014ல் பதிந்து கொள்ளலாம் என்று 2ம் எதிர்மனுதாரர் சொன்னார். எப்போது கிரைய ஆவணம் பதிவு செய்து கொள்ளலாம் என்று நான் கேட்டேன் என்றால் 2012ல் போய் கேட்டேன் அவர் பதிவு செய்து தரமாட்டேன் என்று சொன்னார், நீதிமன்றத்திற்கு சென்றுவிடுவேன் என்று சொன்னபோது ரூ.50 ஆயிரத்தை தந்தபின் பதிவு செய்வதாக சொல்லி 2014ல் பதிவு செய்தார். பத்திரத்தை காலநீட்டிப்பு செய்தேனா என்றால் இல்லை, 2012ல் பேசியதை எழுதிக்கொள்ளவில்லை. 2012ல் நான் கேட்டேன் என்ற விபரத்தை மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். கிரைய ஒப்பந்தத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் மகேஷ்வரி மற்றும் பாண்டி, பாண்டி என்பவர் இறந்துவிட்டார்.

4. 1ம் எதிர்மனதாரருக்கு கொடுக்கவேண்டிய பணத்தை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்காமல் இருப்பதற்காக 2ம் எதிர்மனுதாரரும் நானும் சேர்ந்து கொண்டு கிரைய ஒப்பந்தத்தை உண்மைக்கு மாறாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, 1ம் எதிர்மனுதாருக்கு பணம் கொடுக்க வேண்டிய விபரம் பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் செய்வதற்கு முன்பாகவே 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தீர்ப்பிற்கு முன் ஜப்தி பெற்று அது வில்லங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, நான் வில்லங்கம் போட்டு பார்த்தேன் அதில் இல்லை. 30.12.2013ம் தேதியில்

அந்த வழக்கில் மனு சொத்து ஜப்தி செய்யப்பட்டு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் அதை பற்றி தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்தபின்னர் முன்தேதியிட்ட பத்திரத்தை பயன்படுத்தி 2ம் எதிர்மனுதாரரும் நானும் கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றும், எனவே அது ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்றால் சரியல்ல, நான் விசாரித்ததில் அப்படி ஒரு வில்லங்கம் இருப்பதாக தெரியவரவில்லை. 2ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் ஆஜராகி நடத்தி கொண்டிருக்கும்போதே மேற்படி கிரைய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, யாரும் அந்த வீட்டை வாங்காததால் நான் கிரையம் வாங்க முன்வந்தேன்.

5. இந்த வழக்கிற்கு பின்னிட்டு 2ம் எதிர்மனுதாரரும் நானும் சேர்ந்து அ.வ.எண்.86/2014 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை, நான் அப்படி ஒரு வழக்கை தாக்கல் செய்யவில்லை. 2009ல் நான் ரூ. 2 லட்சம் கொடுத்துள்ள நிலையில் உண்மையில் நான் கிரையம் வாங்க தயாராக இருந்திருந்தால் கிரையம் பதிவு செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், உண்மையில் 2ம் எதிர்மனுதாரர் சொத்தை பாதுகாப்பதற்காக 2009ல் ஒரு ஒப்பந்தம் போட்டதுபோல் வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நடப்பது எப்படி தெரியவந்தது என்றால் நீதிமன்றத்திலிருந்து வந்தார்கள் அதன்மூலம் தெரியும். நான் வீட்டில் குடியிருக்கிறேன் என்று சொல்வது உண்மையல்ல என்றும், நான் கிரைய வாங்குவதற்கு பின் நிறைவேற்று மனுவின் 3, 4 எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தின் முகவரியில் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக தீர்ப்பு வாங்கியுள்ளார் என்று சொல்வது உண்மையல்ல என்றும், 2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்்ல செய்யாமல் இருந்ததால் தான் ஒருதலைபட்ச தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது.

6. 2ம் எதிர்மனுதாரர் இறப்பிற்கு பின்பு 3, 4 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் இருந்துவந்து வழக்கை நடத்தி வந்தார்கள் என்றும் தற்போது 1ம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக உண்மைக்கு மாறாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. ராஜேஸ்வரி

என்பவர் 1ம் எதிர்மனுதாரருக்கு முன்பாகவே 24.09.2012ம் தேதி நீதிமன்றத்தின்மூலம் ஜப்தி செய்துள்ளார் என்றால் தெரியாது. அதன்பின்னர் 09.01.2014ம் இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை ஜப்தி செய்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி 2 ஜப்தி விபரங்களை மறைத்து நானும் 2ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து கொண்டு உண்மைக்கு மாறாக கிரைய ஒப்பந்தமும், கிரையமும் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி ஜப்தி விபரங்கள் தெரிந்துவிடும் காரணத்தினால் தான் நான் 2009ல் பார்த்தாக சொல்லும் வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மனுவுடன் தாக்கல் செய்த வில்லங்க சான்றில் உள்ள சர்வே எண்ணிற்கும் மனு சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்படி வில்லங்க சான்றை நான் பெறவில்லை என்றும், அதை 2ம் எதிர்மனுதாரர் பெயரில் வாங்கப்பட்டது என்றும், வேறொரு சொத்திற்கான வில்லங்க சான்றை காண்பித்து கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றால் சரியல்ல, 2ம் எதிர்மனுதாரர் வைத்திருந்த வில்லங்கத்தை காண்பித்தார். என் பெயரில் வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. சாட்சி தற்போது 2ம் எதிர்மனுதாரர் வில்லங்கம் எதுவும் இல்லை என்று சொன்னதன்பேரில் கிரையம் செய்ததாக சொல்கிறார்.

7. உண்மையில் வில்லங்கம் பார்த்திருந்தால் நீதிமன்றத்தின் மூலம் மேற்கொண்ட ஜப்தி விபரங்கள் தெரிந்திருக்கும் என்றும், ஜப்தி விபரங்கள் பார்க்காததால் தான் ஜப்தி விபரங்கள் தெரியவில்லை என்றும், தற்போது 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தின் மூலம் எடுக்கப்படும் நடவடிக்கையை காலதாமதம் செய்வதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பதியாத கிரைய ஒப்பந்தத்தின் பேரில் நீதிமன்றத்தில் மேற்படி அ.வ.எண்.86/2014 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் வில்லங்க சான்றை தாக்கல் செய்தேனா என்றால் அப்படி ஒரு வழக்கே தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது தவறு என்றும், மேற்படி வழக்கை தாக்கல் செய்தேன் என்றும், அதில் வில்லங்க சான்றை மறைத்து 2ம் எதிர்மனுதாரரும் நானும் உண்மைக்கு மாறாக தீர்ப்பை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பின் அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரருக்கு பணம் எதுவும் கொடுக்காமல் அவசரமாக கிரையம் பதிந்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும் 2ம் எதிர்மனுதாரரும் ஏற்படுத்திக் கொண்ட கிரைய

பத்திரத்தில் மறுபயன் எதுவும் இல்லை, 1ம் எதிர்மனுதாரர் பெற்ற தீர்ப்பின் பலனை அடையாமல் இருப்பதற்காக உண்மைக்கு மாறாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

8. உண்மையில் 2009ல் கிரைய ஒப்பந்தம் போட்டியிருந்தால் உடனடியாக கிரையம் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றம், கிரைய ஒப்பந்தம் உண்மையில்லை என்பதால் தான் 2 முறை காலநீட்டிப்பு காட்டி வழக்கு தாக்கல் செய்து 1ம் எதிர்மனுதாரரின் உரிமையை மறுப்பதற்காக கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் மறுபயன் இல்லாமல் கிரையம் எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. நான் வசதிபடைத்த நபரா என்றால் இல்லை, வேலைக்கு சென்று சேர்த்து வைத்த பணத்தை வைத்து வாங்கினேன். எனக்கு சொத்து வா ங்க வசதியில்லை என்றும், எனவே நான் சொல்வதுபோல் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எப்போது அனுபவம் கொடுத்தார் என்றால் சாட்சி முதலில் 2014 கொடுத்தார் என்று சொல்லிவிட்டு, மீண்டும் 2014க்கு 2, 3 ஆண்டுக்கு முன்பே அனுபவத்தை கொடுத்தார் என்று சொல்கிறார். 2013ல் 2ம் எதிர்மனுதாரருக்கு தாவா வழக்கு சொத்து முகவரியில் தான் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே 2014க்கு 2, 3 ஆண்டுக்கு முன்பாக கொடுத்தார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அ.வ.எண்.86/2014 வழக்கில் நானும் 2ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து கொண்டு தீர்ப்பு பெற்ற பின்னர் மீதத்தொகை ரூ.50 ஆயிரத்தை நான் 2ம் எதிர்மனதாரரிடம் கொடுப்பதாக சொன்னபின்னர், அவர் மேற்படி தொகையை பெற்றுக்கொண்டு அவர் கிரையம் பதிவு செய்து தந்தார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் நான் வழக்கே தாக்கல் செய்யவில்லை.

9. ம.சா.ஆ.2 ஆவணத்திலேயே நான் வழக்கு சொத்தில் இருப்பதுபோல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நடுத்தெரு, மானூரில் தான் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ2 ஆவணத்தில் 2ம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் குடியிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே 2014க்கு முன்பே வழக்கு சொத்தில் நான் குடியிருப்பதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் என்னுடைய முகவரி மானூர் கிராமம், தேவர் நகர் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் நிரூபணவாக்குமூலத்தில்

உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்கிறார். நான் வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை என்றும், 2014க்கு முன்பே நான் அங்கு குடியிருப்பதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5ல் நான் வழக்கு சொத்தில் குடியிருப்பதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனவே தான் மனுவில் 2, 3ம் எதிர்மனுதாரர்களின் கதவு எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனவே தான் சொத்தின் சர்வே எண் தெரியவில்லை என்றால் சரியல்ல. எனவே தான் உண்மையல்லாத ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

10. எனவே தான் ம.சா.ஆ.2ல் உள்ள முகவரிக்கும் ம.சா.ஆ.5ல் உள்ள முகவரியும் மாறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரிடம் 2ம் எதிர்மானுதாரர் பெற்ற கடனை கொடுக்காமல் இருப்பதற்காக 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் பெற்ற தீர்ப்பை நிறைவேற்றாமல் இருப்பதற்காக உண்மைக்கு மாறாக இந்த மனுவை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறோம் என்றும், 2ம் எதிர்மனுதாரரின் இறப்பிற்கு பின்பு என்னுடைய உறவினரான 3, 4 எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து கொண்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனவே கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

K RENUGADEVI

Digitally signed by K RENUGADEVI
Date: 2025.11.19 14:10:48 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.